11.06.2025 **OS.No. 167 / 2021**

**வா.சா. 1 பெயர்: ரோஜீயம்மாள் க/பெ. கோவிந்தசாமி**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்சி**

வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் மகாராஜன் பெயரிலும் உள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா மாதேஷ்வரன் மற்றும் மகாராஜன் பெயரில் தான் கூட்டாக உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக எனது பெயரில் கூட்டாக உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பட்டா எனது பெயரில் இல்லை என மகாராஜன் சொன்னார் அதனால் தான் அரசு அலுவளர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன். பட்டா மாதேஷ்வரன் பெயரில் மாற்றிவிட்டார்கள் என்று தெரிவித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மதேஷ்வரன் உயிருடன் இருந்து போது ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. நானும் மகாராஜனும் தான் கூட்டாக ஓட்டி வருகிறோம். அவ்வாறு எத்தனை வருடம் கூட்டாக ஓட்டி வருகிறோம் என்றால் எனது அம்மா எழுதியதில் இருந்து கூட்டாக ஓட்டி வருகிறோம். எனது அம்மா தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். அதை நீதிமன்றத்தில் ஒப்படைப்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். சக்தி குமார் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் நிலத்திற்கு சென்ற போது என்னை தடுத்ததால் தரப்பினராக சேர்த்துள்ளேன். சக்திகுமார் மீது பத்திரம் உள்ளது என சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புவனேஷ்வரி மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர் நிலத்தில் என்னிடம் தகறாறு செய்ததால் தரப்பினராக செய்துள்ளேன். அவர் மீது பத்திரம் உள்ளது என சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் மகாராஜனுக்கும் எந்த வித பிறச்சனையும் இல்லை. மகாராஜனை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. அவர் பாதி நான் பாதி ஓட்டி வருகிறோம். பாகம் பிரக்கவில்லை. நான் மேற்கு பக்கம் பாதியும், மகாராஜன் கிழக்கு பக்கம் பாதியும் ஓட்டி வருகிறோம். அவ்வாறு எப்போதிலிருந்து பாதி பாதியாக ஓட்டி வருகிறோம் என்றால் எனது அம்மா சொன்னதில் இருந்து ஓட்டி வருகிறோம். மாதேஷ் மகாராஜனுக்கு எதிர்ராக தாக்கல் செய்த வழக்கு பற்றி வழக்கறிஞர் இடம் சொன்னேனா என்றால் இல்லை. அவ்வாறு எனக்கு எதிராக மாதேஷ் தீர்ப்பு வாங்கியுள்ளர் என்றும் அதை ரத்து செய்ய சொல்லியும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மாதேஷ்சுக்கு ஒரு தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்து அனுபவம் ஒப்டைத்துவிட்டேன் என்றாலும் ஆனால் தற்போது அவர் இறந்து விட்டதால் எழுதிகொடுக்கவில்லை என் பொய்யாக தெரிவித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2004 லில் இருந்து மாதேஷ் பெயரிலும் மகாராஜன் பெயரிலும் கூட்டாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தற்போது புவனேஷ்வரி பெயரில் பத்திரம் பதிவு செய்து அவர் அனுபவம் செய்து வருவதை நான் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால்

சரியல்ல. வழக்கில் எவ்வித உரிமை இல்லை என்றாலும் பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஓம்/– திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.